# காலை முரசு

பக்கங்கள்:-23

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 04 | சனிக்கிழமை | 20.07.2024 | அதிர்வு 354




## பனாகொடை மகேஸ்வரன் காலமானார்

ஈழவிடுதலைப்போராட்ட இயக்கங்களில் ஒன்றான தமிழீழ விடுதலை இராணு வத்தின் (TEA) 06

# யாழிலிருந்து கதிர்காமம் சென்ற பஸ் திருகோணமலையில் கோர விபத்து!

## 51 பேர் காயங்களுடன் மூதூர் வைத்தியசாலையில்



(எஸ்.நிதர்ஷன், அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் நோக்கிச் சென்ற தனியார் பஸ், திருகோணமலையின் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்கை பாலத்துக்கு அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 51 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது

விபத்தில் காயமடைந்தவர்கள் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் பலத்த காயமடைந்துள்ளனர் என்று 06

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே தீர வேண்டும்



## விஜித ஹேரத் எம்.பி. வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

“ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட அல்லது குழப்புவதற்குச் சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், தேர்தலை யாருமே பிற்போட முடியாது. திட்டமிட்ட வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.”

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார். 06

# திருமலை பிரதீபன் திடீரென மறைந்தார்



திருகோணமலையின் இளம் சமூகச் செயற்பாட்டாளர் குருநாதன் பிரதீபன் (திருமலை பிரதீபன்) தமது இளம் வயதில் நேற்று மாலை இருதய நோய் காரணமாக திடீரெனக் காலமானார்.

இவர் திருகோணமலையின் புகழ் பூத்த தமிழ், ஆங்கில ஊடகவியலாளர் அமரர் சின்னையாக குருநாதனின் சிரேஷ்ட புதல்வர் ஆவார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 06




நீண்ட நாள்களுக்குப் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் நேற்று மாலை சந்தித்தேன். நீண்ட உரையாடல். பழைய நெருக்கடி காலத்தைப் பற்றிய விடயங்களை – நினைவுகளை – மீட்டோம், ஒருவரை ஒருவர் குற்றம் சொல்வதைத் தவிர்த்து.

2006இல்புலிகளுடன்பேசிஇணக்கதீர்வு காணாமல் காண முடியாமல் போனமை வருத்தத்திற்குரியது என்றார்.

அவரது ஆட்சிக்காலத்தில், பத்திரிகையாளனாகக் கடத்தப்பட்ட நான் மிக மோசமான அனுபவங்களுடன் 06







# நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் அன்றி இளைஞர்களே நாட்டின் தேசிய வளமாவர்

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

"நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதன் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் நிதியைக் கொண்டு எதிர்காலத்தில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக அதிக நிதியை வழங்க முடியும். நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் அன்றி, இளைஞர்களே நாட்டின் தேசிய வளமாவர்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி – வலஹன்துவ பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ருஹுணு பல்கலைக்கழகத்தின் புதிய சுகாதார விஞ்ஞான பீடத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்து கொண்ட ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்து விஞ்ஞான பீடத்தின் கட்டடத்தை மாணவர்களுக்கு கையளித்த ஜனாதிபதி, கட்டட வளாகத்தை மேற்பார்வையிட்டதன் பின்னர் பல்கலைக்கழக ஊழியர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

ருஹுணு பல்கலைக்கழக உபவேந்தர் சுஜீவ அமரசேன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கி வைத்தார்.

இதன்போது விஞ்ஞான பீட மைதானத்தில் மரக்கன்று ஒன்றை நாட்டி வைத்த ஜனாதிபதி, பல்கலைக்கழக ஊழியர்களுடன் குழுப் படம் எடுத்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்த இணை சுகாதார பீடத்தை திறந்து வைப்பதற்காக தன்னை அர்ப்பணித்தார். இந்தக் கட்டடத்தை அனைவரும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்கா போன்ற பெரிய பல்கலைக்கழகங்கள் 24 மணி நேரமும் இத்தகைய கட்டடங்களால் பயனடைகின்றன. அரசுப் பணம் கல்விக்காகப் பயன்படுத்தப்படும்போது, அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த வகுப்புகள் சீர்குலைந்தால் உங்களுக்கும் நாட்டுக்கும் பாதிப்புகள் ஏற்படும்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அந்த கூட்டுதாபனத்துக்காக 700 பில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக இங்கு குறிப்பிடப்பட்டது. ஆனால் அந்த 700 பில்லியன் ரூபாவை பத்து மடங்காக பெருக்கிப் பார்க்க வேண்டும். இவ்வளவு

தொடர்ச்சி▼

















# நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் அன்றி இளைஞர்களே நாட்டின் தேசிய வளமாவர்

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

தொடர்ச்சி▲

பெரிய தொகையை செலவழித்ததன் விளைவாக மூன்று அரசாங்கங்களின் கீழ் இதனை ஈடுசெய்ய கடன் பெற நேரிட்டது. இதனால், நாட்டின் கடன் தொகை அதிகரித்தது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது, முதலில் கடன் வாங்குவதை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது கடினமான பணியாகும். ஆனாலும் அதனை செய்ய வேண்டியிருந்தது. அதற்குப் பதிலாக, புதிய முறையில் பணத்தை தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் காணப்பட்டது. ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் தங்களது சொந்த செலவுக்கான நிதியை ஈட்டிக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினோம்.

இந்த நிலை அனைத்து துறைகளையும் பாதித்தது. என்னை திட்டித் தீர்த்தனர். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய அனுமதிப்பதா அல்லது அவதூறுகளை ஏற்றுக் கொள்வதா என்பதை நான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்தப் பொறுப்பில் இருந்து விலக முடியாத நிலைமை இருந்தது. அந்த செயற்பாடுகளுக்கு அனைத்து அமைச்சர்களும் ஆதரவு வழங்கினர்.

அப்போது, அரச நிறுவன மறுசீரமைப்பு திட்டத்துக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இன்று நாட்டின் மின் மற்றும் எரிபொருள் கட்டணங்கள் உலக சந்தையின் விலைக்கு அமைவாக உள்ளன. மேலும், ஏனைய கூட்டுத்தாபனங்களுக்கும் பணம் வழங்குவதை நிறுத்தினர். நாங்கள் தற்போது ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள், அந்த கட்டண நடவடிக்கைகளில் இருந்து விடுபட அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதனால் எஞ்சும் தொகையை நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக பயன்படுத்த முடியும்.

இந்த நடவடிக்கைகளை செயல்படுத்தும் போது பல விமர்சனங்கள் எழுந்தன. அப்போது, நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை நமது தேசிய சொத்தாக கருதுவதா அல்லது இளைஞர்களை தேசிய சொத்தாக கருதுவதா என்ற கேள்வி எழுந்தது. நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களைப் பாதுகாப்பதா அல்லது கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பணம் கொடுப்பதா என்பதை முடிவு செய்ய வேண்டும். இந்த புதிய வேலைத் திட்டங்கள் மூலம் அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் புதிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல ஒன்றுபடுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.” – என்றார்.











# சொகுசு வீட்டு தொகுதிக்கான அடிக்கல் யாழ் நகரில் நேற்று

- எஸ்.நிதர்ஷன் -

Tilko Blue Ocean நிறுவனத்தின் "Yarl Royal Palace" சொகுசு வீட்டு தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கண்டி வீதியில், பழைய பூங்காவிற்கு முன்பாக இந்த சொகுசு மாடி அமையப்பெறவுள்ளது.

அதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் , யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், மருத்துவபீட பீடாதிபதி, கலைப்பீட பீடாதிபதி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

"இந்த சொகுசுமாடி வீட்டு தொகுதியானது புதிய பரிமாண வளர்ச்சி தொழிநுட்பங்களை கொண்டு அமைக்கவுள்ளோம். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணத்தில் தமது முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்பதனை எமது முயற்சி ஊடாக வெளிப்படுத்தவுள்ளோம்.

"எமது இந்த முயற்சி ஊடாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணத்தை நாடி வருவார்கள் என நம்புகிறோம். யாழ்ப்பாணத்தை பெரிய சிங்கப்பூர் ஆக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

"நாம் இந்த துறையில் நீண்ட கால அனுபவங்களைக் கொண்டவர்கள். எமது அனுபவங்கள் அறிவினை கொண்டு யாழ்ப்பாணத்தில் மிக பிரமாண்டமாக புதிய தொழிநுட்பங்களை உட்புகுத்தி இந்த சொகுசு மாடியை நிர்மாணிக்க உள்ளோம்." – என Blue Ocean நிறுவனத்தின் சிவராஜா துமிலன் மற்றும் Tilko City Hotel உரிமையாளர் திலக் திலகராஜ் ஆகியோர் தெரிவித்தனர்.









# உடுப்பிட்டிச் சிங்கம் சிவசிதம்பரத்தின் ஜனன தினம் இன்று

## நெல்லியடியில் அஞ்சலி நிகழ்வு

தமிழ்த் தலைவர்களில் ஒருவரான உடுப்பிட்டிச் சிங்கம் அமரர் மு.சிவசிதம்பரத்தின் 101 ஆவது ஜனன தினம் இன்றாகும்.

இதனையொட்டி இன்று காலை 8.30 மணிக்கு நெல்லியடி பஸ் நிலையச் சதுக்கத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அரசியல்வாதிகள், பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஒன்றுதிரண்டு அஞ்சலி செலுத்துவார்கள்.

உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் சிவசிதம்பரம், தமிழர்களின் ஒன்றுபட்ட அணியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவும் இருந்து வந்துள்ளார்.





# அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் அச்சமும் கொள்ளத் தேவையில்லை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“சர்வஜன வாக்கெடுப்புக்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதிலிருந்து ஜனநாயகத்தை பேணி வந்த நாடு என்ற வகையில் இலங்கை தொடர்ந்தும் அதற்காக அர்பணிக்கும். அரசமைப்புத் திருத்தம் குறித்து எவ்விதத்திலும் அச்சம் கொள்ள வேண்டாம்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி பெலிகஹ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலி பிரதேச மக்களின் சட்ட ஒழுங்கை பாதுகாக்கும் செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் நோக்கில் 1,600 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த புதிய நீதிமன்ற வளாகத்தில், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம், இரண்டு மேல் நீதிமன்றங்கள், மூன்று மாவட்ட நீதிமன்றங்கள், இரண்டு நீதவான் நீதிமன்றங்கள் உள்ளன.

சட்ட உதவி மையம், சமூக சீர்திருத்த அலுவலகம், நன்னடத்தை அலுவலகம், கடன் நிவாரண சபை சட்ட உதவி உள்ளடங்களாக நீதித்துறை பணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இந்தக் கட்டடத் தொகுதியில் உள்ளன.

பெயர் பலகையை திரைநீக்கம் செய்து, நீதிமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி, கட்டித்தொகுதியை மேற்பார்வை செய்தார். காலி சட்டத்தரணிகளினால் இதன்போது ஜனாதிபதி நினைவுப் பரிசு ஒன்று வழங்கப்பட்டது.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில் ஃ

“1931 ஆம் ஆண்டில் ஆசியா, ஆபிரிக்காவில் முதல் முறையாக இலங்கையே சர்வஜன வாக்கெடுப்பு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டது. வேறு எந்த நாட்டுக்கும் கிடைக்கவில்லை. அமெரிக்காவின் சில பகுதிகளில் கறுப்பினத்தவர்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை. அதனைப் பெற்றுக்கொண்டதிலிருந்து தொடர்ச்சியாக ஜனநாயகத்தை பேணிவரும் நாடாகவும் இலங்கை மட்டுமே விளங்குகிறது. அதனையிட்டு நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்

யுத்தம் இருந்தாலும், கலவரங்கள் ஏற்பட்ட போதிலும் 1931 ஆம் ஆண்டு முதல் ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் ஜனநாயகத்தைப் பாதுகாத்த ஒரே நாடு இலங்கை ஆகும். நாம் எவ்வளவு வாதிட்டாலும் ஜனநாயகத்தை இல்லாமல் ஆவதற்கு இடமளிக்கவில்லை.

தேர்தலில் தோல்வியடைந்த பிறகு, இலங்கையில் மாத்திரமே மோதல் இல்லாமல் அதிகாரம் மாற்றப்படுகிறது. இந்த நாட்டில் ஜனநாயகம் செயல்படுகிறது. விவாதங்கள் இருந்தபோதிலும், ஜனநாயகம் ஒருபோதும் இழக்கப்படுவதில்லை.

சில பிரச்சினைகள் வரும்போது ஜனநாயகம் பறிபோய்விடும் என்று சிலர் சொல்கிறார்கள். நமது சட்டத்துறை, நீதித்துறை மற்றும் அரசியல் முறைமை எப்படியோ இந்த கட்டமைப்பை முன்னெடுத்துச் சென்றுள்ளது. இந்த வகையில் 2022ஆம் ஆண்டு ஜனநாயக அமைப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் உடன்பாட்டுடன் முன்னோக்கிச் செல்கிறோம்.

நாடாளுமன்றத்தில் எமக்கு விவாதிக்கலாம். ஆனால் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். தற்போது தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த காலக்கெடுவுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என பிரதம நீதியரசர் தரப்பும், உயர் நீதிமன்றமும் தெரிவித்துள்ளன. அதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

2015 ஆம் ஆண்டில் நாம் புதிய அரசமைப்பு திருத்தத்தை சமர்ப்பித்தோம். நான் வழக்கமாக இத்தகைய பணிகளை கே. என். சொக்ஸி சட்டத்தரணிக்கே வழங்குவேன். ஆனால் அப்போது அவர் உயிருடன் இல்லாத காரணத்தால் சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்னவிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது.

அவருக்கு ஒரு வாக்கியத்தை நீக்க முடியவில்லை. அவ்வளவுதான் நடந்திருக்கிறது. அதற்காகத்தான் இந்த அலறல். இது அவரது கவனக்குறைவாக இருக்கலாம். அந்த தவறிற்கு நாட்டு மக்களிடம் நான் மன்னிப்பு கேட்கிறேன். அதுபற்றி மேற்கொண்டு கருத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. எனவே, இது குறித்து பயப்பட வேண்டாம். நமது நாடு 1931 முதல் ஜனநாயகத்தைப் பாதுகாத்து வருகிறது.

மேலும், இந்தக் காலி வரலாற்றின் பாரம்பரியம் குறித்து ஒரு புத்தகம் தொகுக்கப்படும் என்றால், அதற்கான பணத்தை அரசாங்கம் வழங்கும் எனவும் தெரிவிக்கிறேன்.” – என்றார்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டரை மாதங்களின் பின்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திலிருந்து மீண்டமை குறித்த விடயத்தையும் நாங்கள் இரை மீட்டோம் – காழ்ப்புணர்ச்சியின்றி.

அப்போது நடந்தவற்றை – சம்பந்தப்பட்ட அதிகாரிகளை – பற்றி எல்லாம் தமக்கு பகுதி பகுதியாக நினைவிருந்தவற்றை அவர் குறிப்பிடத் தவறவில்லை.

தலைவர் பிரபாகரனின் குடும்பத்தில் ஓரிழப்பு அவரின் மனச்சாட்சியை ஆழமாகத் தாக்கியிருப்பதை அவரின் பேச்சின் நடுவே என்னால் உணர முடிந்தது.

மனம் திறந்து நட்புடன் அவர் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்ட விடயங்கள் பகிரங்கமாக இச்சமயத்தில் எழுத முடியாதவை என்பதால் அமைகிறேன். ஆயினும் காலம் பொருந்தி வருகையில் அதை வெளியிடுவேன். அதற்கு ஆதாரங்கள், சாட்சியங்கள் என்னிடம் உண்டு.

இலங்கையில் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தக் கிடைத்த வாய்ப்பைக் கோட்டை விட்டுவிட்டோம் என்ற மனக் கவலை இப்போது அவரை அரிப்பதை உணர முடிந்தது. எனினும் அதை மீறி வயதும் வயோதிப ஆயாசமும் அவரை ஆட்கொண்டிருந்தன.

“இனி நான் செய்வதற்கும் சொல்வதற்கும் ஒன்றும் இல்லை. ஆயினும் நாட்டின் மூத்த தலைவர்களில் ஒருவன் என்ற முறையில் தரப்புக்களை அழைத்து, ஒன்றாகப் பேசி ஏதாவது தீர்வு காணுங்கள் என்று நான் உரிமையோடு ஆலோசனை கூற முடியும். தேர்தல் முடிந்த பின்னர் அதைச் செய்யலாம் என்று நினைக்கிறேன்’ என்ற சாரப்பட அவர் கருத்து அமைந்திருந்தது.

வயது போனமையால் ஆயாசம் அவரை சூழ்ந்திருக்கிறது.

யுத்தம் முடிவுற்ற பின்னரும் சுமார் பத்துப் பதினைந்து வருடங்கள் தமிழர்களை ஒன்றாகக் கட்டி வைத்திருந்த சம்பந்தனின் இழப்பு தமிழர்களுக்கு பெரும் பாதிப்பு என்றார் அவர்.

தமிழர் தரப்புகளுடனும் பேசுவேன், ஏதாவது ஒன்றைப் பெற்றுக் கொண்டு அதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு நகர முயற்சியுங்கள் என்று ஆலோசனை கூறுவேன் என்றார் அவர்.

தென்னிலங்கையையும் வெல்லக் கூடிய தமிழ் தலைவர்கள் அதற்கு அவசியம் என்றார் அவர்.

ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் ஒரு சாதகமான கருத்து நிலையே அவரிடம் காணப்படுகின்றது. எனினும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக்கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்துவதே சாலச் சிறந்தது என்று கூறினார்.

மொட்டுக் கட்சியின் தீவிர அரசியலிலும் முடிவுகளிலும் அவருக்குக் காத்திரமான பங்கிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவருக்கு ஒரு மக்கள் ஆதரவு அலை இருக்கின்றது, அதை மொட்டுக்கட்சி பயன்படுத்தும். அவ்வளவே.

என் விடயத்தில், அரசியலுக்கு – கருத்து முரண்பாடுகளுக்கு – வேறுபட்ட எதிரெதிர் நிலைப்பாடுகளுக்கு – அப்பால், நீண்டகால நண்பராக ஒரு தமிழ்ப் பத்திரிகையாளரை அவர் பார்க்கின்றார் என்பது மட்டும் உண்மை.

தன்னை இன்றுவரை மிக மோசமாக விமர்சிக்கும் ஒரு தமிழ்ப் பத்திரிகையாளனை மதிக்கும் அவரது பண்பு, அரசியல் முதிர்ச்சியின் வெளிப்பாடு என நினைக்கிறேன்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசு கட்சியின் பத்து எம்.பிக்களில் ஒருவர் நேற்று ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்றிருந்தார்.

ஜனாதிபதியைச் சந்தித்தார். தமது மாவட்டத்தில் தமிழர் தரப்புக்கு விரோதமான பல நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான சமர்ப்பணங்களை ஜனாதிபதியிடம் பிரேரித்து, சாதகமான பதில்களையும் பெற்றுக் கொண்டார் எனத் தெரிகின்றது.

திரும்பும் வழியில் வஜிர அபேவர்த்தன எம்.பி. அவரை இழுத்துச் சென்று அரை மணி நேரம் உரையாடினார். தமிழரசு கட்சியின் எம்.பிக்கள் எந்தப் பக்கம் என்று ஒவ்வொருவராகப் பெயர் குறிப்பிட்டுத் துருவித் துருவி விசாரித்தார். ஜனாதிபதியைத் தொடர்பு கொண்டு ஆளுக்கு இரண்டு மதுபான சாலை உரிமங்களை பெற்ற இரண்டு எம்.பிக்கள் இப்போது பிடி கொடுக்காமல் நடக்கின்றனர் என்று சீற்றத்துடன் வைதாராம் வஜிர.

பாம்புக்கு வால். மீனுக்குத் தலை. ஒருபுறம் மதுபான சாலை உரிமம். மறுபுறம் தேசியம்.

வாழ்க தமிழ்...!

## திருமலை பிரதீபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதரவாளரான இவர், திருகோணமலை மக்கள் மத்தியில் தமது சமூக செயற்பாடுகளால் பெரிதும் மதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழிலிருந்து கதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதித் தேர்தலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்கள் கிடைத்திருக்கின்றன.

ஆகையினால் தேர்தல் திகதி, வேட்பாளர் பெயர், பதிவு செய்யும் திகதி என்பனவற்றைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க முடியும். அது தொடர்பான அறிவிப்பை மிக விரைவில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

எனவே, திட்டமிட்டவாறு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். அதனை யாருமே நிறுத்த முடியாது. எனவே, தேர்தலை இப்பவே அறிவித்து தேர்தலை நடத்த வேண்டும் என்று கோருகின்றோம்.

அரசு தற்போது ஒரு யோசனையை அமைச்சரவைக்கு முன்மொழிந்துள்ளது. அதனால் இந்தத் தேர்தலை நிறுத்த முடியாது.

அதை நிறைவேற்ற இந்த அரசுக்கு மூன்றிலிரண்டு அதிகாரம் வேண்டும். இந்த அரசுக்கு அது இல்லை. அதற்காகப் பொது வாக்கெடுப்பை இதில் கோர்த்து ஜனாதிபதித் தேர்தலைக் குழப்ப முடியாது.

எதிர்வரும் செப்டெம்பர் இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வாய்ப்புள்ளதாக இருக்கின்றது. அதற்கமைய தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு ஆயத்தமாகி வருகின்றது. எனவே, தேர்தல் திடமிட்ட வகையில் நடைபெற வேண்டும்.” – என்றார்.

## பனாகொடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவராக விளங்கிய தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் (பனாகொடை மகேஸ்வரன்) யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் 1970 களின் நடுப்பகுதியில் இலண்டனில் உயர்கல்வியை இடைநடுவில் உதறிவிட்டு, தாயகம் திரும்பி தமிழக விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்ட முதல் தலைமுறை போராளியாவார்.

இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, உயர் பாதுகாப்புச் சிறையான பனாகொடை இராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, இராணுவத்தினருக்கு “டிமிக்கி” கொடுத்து விட்டு அதிலிருந்து வெற்றிகரமாக தப்பியமையால் “பனாகொடை மகேஸ்வரன்“ என்றும் அவர் அழைக்கப்பட்டார்.

பிற்காலத்தில் பல்வேறு இயக்கங்களும் பிரதான இயக்கங்களால் ஒடுக்கப்பட்ட பின்னர், ஆயுதப் போராட்ட வாழ்வில் இருந்து விலகி இருந்த அவர், அண்மைக் காலத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நட்புறவாகச் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






# கடலட்டை பண்ணைகள் அமைக்க அனுமதி கோரும் கடற்றொழிலாளர்

(எஸ்.நிதர்ஷன்)

கடலட்டை பண்ணைகளை அமைக்க எமக்கு அனுமதிகளைத் தந்து எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த துறைசார் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊர்காவற்றுறை – மெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

“நாங்கள் சுமார் 2 கிலோ மீற்றர் சுற்ற வட்டத்துக்குள்ளேயே தொழில் செய்து வருகின்றோம். பல வருட காலமாக அப்பகுதியில் தொழில் செய்து வந்தமையால் , எமது கடல் வளங்கள் அழிந்துள்ளன. அதனால் நாம் மாற்றுத் தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அதனால் மூன்று குடும்பங்களுக்கு ஒரு கடலட்டை பண்ணை தாருங்கள் என விண்ணப்பித்தோம். அதற்கான அனுமதிகளைத் துறை சார்ந்த அதிகாரிகள் பெற்றுத் தர நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இந்நிலையில், எமக்குக் கடலட்டை பண்ணைகளை அமைக்க அனுமதி கொடுக்கக் கூடாது என சில விஷமிகள் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

நரியான்பிட்டி , கொக்குப்பிட்டி எனும் இடத்தில்தான் கடலட்டைப் பண்ணைகளை அமைக்க அனுமதி கோரியுள்ளோம். அதனால் மீன் வளத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. யாருடைய தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படாது.

கடல் வளத்திலும் சுற்றுச் சூழலிலும் எங்களுக்கும் அக்கறை உண்டு.” – என்றார்.

# மொட்டு என்னை ஆதரித்தால் பஸிலைப் பிரதமராக்குவேன்!

## இதுவே ரணிலின் டீல்

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவளித்தால் பஸில் ராஜபக்ஷவைப் பிரதமராக்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடம் உறுதியளித்துள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று ஐக்கிய சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி முற்பட்டு வருகின்றார். அதற்காக அக்கட்சியைத் திருப்திபடுத்துவதற்காகப் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பஸில் ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவியைத் தருகின்றேன், எனக்கு ஆதரவு தாருங்கள் என்பதுதான் புதிய முன்மொழிவாக உள்ளது.

பஸில் ராஜபக்ஷ மக்களால் விரட்டப்பட்டவர். எனினும், மொட்டுக் கட்சிக்குள் அவருக்கே செல்வாக்கு உள்ளது. மஹிந்த ராஜபக்ஷ செல்லாக்காசாகி வருகின்றார். இது ரணிலுக்கும் தெரியும். அதனால்தான் பஸில் ராஜபக்ஷவைக் குறிவைத்துள்ளார்.

முதலில் பிரதமர் பதவியைத் தருகின்றேன், எனக்கு பின்னர் நீங்கள் ஜனாதிபதியாக வரலாம், ஆதரவு தாருங்கள் என்பதே ரணிலின் கோரிக்கை. எது எப்படி இருந்தாலும் ரணிலால் வெற்றி பெற முடியாது. ஏனெனில் அவரின்



ஜாதகக் கட்டமைப்பு அவ்வாறுதான் உள்ளது.

தேர்தலைப் பிற்போடும் ஜனாதிபதியின் எந்த முயற்சியும் எடுபடாது. அதற்கு நாடாளுமன்றத்தின் ஆதரவும் கிட்டாது.” – என்றார்.

எனினும், இந்தத் தகவலை நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது , ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி நிராகரித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார் எனவும், பஸில் பதவி எதையும் கோரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வாக்களிக்கும் உரித்து

இலங்கையில் ஜனநாயக உரிமைகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் முக்கியமான வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டிருக்கின்றது.

எந்தக் குற்றங்களுக்காகவும் குற்றம் சுமத்தப்படும் எவரும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பால் ஐயம்திரிபற நிரூபிக்கப்படும் வரை சுத்தவாளியாகவே கருதப்பட வேண்டும் என்பது சட்டத்துறையில் முக்கிய கோட்பாடாகும்.

ஆனால், குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில் கைதாகி, சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்படும் கைதிகள் விடயத்தில் இந்தச் சட்டக் கோட்பாடு - கருத்து - பல சமயங்களில் மறக்கப்பட்டு விடுகின்றது.

சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்படுபவர்களில் கணிசமானோர் பின்னர் குற்றம் நிரூபிக்கப்படாத பின்னணியில் சுத்தவாளிகளாக விடுவிக்கப்பட்டு விடுகின்றனர். ஆனால் விளக்கமறியலில் - சிறையில் - தடுப்புக் காவலில் - இருக்கும் காலத்தில் பல தரப்பினரும் அவர்களைக் குற்றம் இழைத்த கைதிகளாக நோக்கும் பண்பியல்பு நம் மத்தியில் தொடர்கின்றது.

அத்தகைய கருத்தியலுக்கு எதிராகவே இப்போது உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவர் சுதேஷ் நந்திமால் சில்வா இந்த மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றார்.

விளக்கமறியல் கைதிகளுக்கு, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் பங்குபற்றவும், வாக்களிக்கவும் உள்ள உரிமையை அங்கீகரித்து, செயற்படுத்துமாறு தேர்தல் ஆணையத்துக்கு உரிய உத்தரவுகளை வழங்கும்படி உயர் நீதிமன்றத்திடம் விண்ணப்பித்திருக்கின்றார் அவர்.

கடந்த மே மாதக் கணக்கெடுப்பின் படி இலங்கைச் சிறைகளில் 19 ஆயிரத்து 867 விளக்கம் மறியல் கைதிகள் இருந்தனர். இவர்கள் குற்றம் நிரூபிக்கப்படாத சந்தேக நபர்கள்.

அவர்களுக்கு எதிராக சட்டத்துறை நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற காரணத்திற்காக அவர்களின் ஜனநாயக உரிமையை - தேர்தல்களில் பங்குபற்றுவதற்கு அவர்களுக்குள்ள உரித்தை - மறுப்பது ஜனநாயக விரோதப் போக்காகும்.

அந்த அடிப்படையில் இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

விளக்கமறியலில் இருப்பவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை அளிப்பது செயல் முறையில் - நடைமுறையில் - நெருக்கடியானதாயினும் அந்தக் கோரிக்கை முற்றிலும் நீதியானதாகும். நியாயத்தின் பாற்பட்டதாகும்.

வலது குறைந்தோருக்கு - கண்பார்வையற்றோருக்கு - செவிப்புலனற்றோருக்கு - வயோதிபர்களுக்கு - வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்காக பெருந்தொகை நிதியையும் வளத்தையும் நேரத்தையும் செலவிடும் தேர்தல் ஆணையம், குற்றம் நிரூபிக்கப்படாத சந்தேகநபர்களின் ஜனநாயக உரிமைகளை நிலை நிறுத்துவதிலும் அதிக சிரத்தையும் கவனமும் எடுப்பது கட்டாயமானதாகும்.

அரசமைப்பின் 103 மற்றும் 104 (ஆ) ஷரத்துகளின் படி விளக்கமறியலில் உள்ள கைதிகளுக்கான வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளது என்றும் உயர்நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் இருக்கும் கைதிகளின் வாக்களிக்கும் உரிமை அங்கீகரிக்கப்பட்டால், அது தேர்தல் முடிவுகளில் காத்திரமான தாக்கத்தை செலுத்தக்கூடிய எண்ணிக்கை என்பதையும்இவ்விடயத்தில்நீதிமன்றம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கையில் நீதித்துறையின் தனித்துவத்துக்கும் அத்தகைய வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்துவது சிறப்பை தரும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் பா.ஜ.க. முன்னாள் நிர்வாகி கைது



ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த பா.ஜ.க. முன்னாள் நிர்வாகி அஞ்சலையை தனிப்படை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங், கடந்த 5 ஆம் திகதி பெரம்பூரில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு, குன்றத்தூரைச் சேர்ந்த திருவேங்கடம் உட்பட 11 பேரை அடுத்தடுத்து கைது செய்யப்பட்டு பூந்தமல்லி சிறையில் அடைக்கப்பட்டனர்.

கைதான 11 பேரையும் 5 நாள் காவலில் எடுத்து பொலிஸார் விசாரித்தனர். அப்போது பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிய திருவேங்கடம் கடந்த 14 ஆம் திகதி பொலிஸாரால் என்கவுன்ட்டர் செய்யப்பட்டார்.

இதனிடையே, ஆம்ஸ்ட்ராங் கொலை விவகாரத்தில் கொலையாளிகளுக்கு 1 கோடி ரூபா வரை கைமாறியதாக பரபரப்பு தகவல்கள் வெளியானது. அதன் தொடர்ச்சியாக சதீஷ், மலர்க்கொடி, ஹரிஹரன் ஆகிய மூன்று வழக்கறிஞர்கள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதையடுத்து, ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது.

இந்தக் கொலை வழக்கில் சிக்கியவர்களில் தி.மு.க. நிர்வாகி மகன் மற்றும் அ.தி.மு.க, பா.ஜ.க, த.மா.கா. ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உள்ளனர் என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

ஆம்ஸ்ட்ராங் கொலை தொடர்பாக பா.ஜ.கவினுடைய வட சென்னை மேற்கு மாவட்ட துணைத் தலைவர் பதவியிலிருந்த அஞ்சலை என்பவரை பொலிஸார் தேடி வந்தனர். இதனிடையே, பா.ஜ.கவின் வட சென்னை மேற்கு மாவட்ட துணைத் தலைவர் பதவியில் இருந்து அஞ்சலை நீக்கப்படுவதாக கட்சியின் மாநில துணைத் தலைவர் கரு.நாகராஜன் பாரதிய ஜனதா கட்சி சார்பில் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த வழக்கில் தேடப்பட்டு வந்த பா.ஜ.கவின் முன்னாள் நிர்வாகியான அஞ்சலை தலைமறைவாக இருந்த நிலையில், நேற்று தனிப்படை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சென்னையில் இரகசிய இடத்தில் வைத்து அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என கூறப்படுகிறது.

புளியந்தோப்பை சேர்ந்த அஞ்சலை (வயது 48) ஆற்காடு சுரேஷ்’க்கு நெருக்கமானவர் என தகவல் வெளியாகியுள்ளது.



# நீட் தேர்வு முடிவுகளை ரத்து செய்யமுடியாது

## உச்சநீதிமன்றம் திட்டவட்டம்

கடந்த மாதம் வெளியான நீட் தேர்வு முடிவுகளை ரத்து செய்யமுடியாது என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

நீட் தேர்வு தொடர்பான 38 மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே உச்ச நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதன்போது ” கடந்த மாதம் வெளியான நீட் தேர்வு முடிவுகளை ரத்து செய்யமுடியாது என்றும், ஒட்டுமொத்த தேர்வு முறையும் பாதிக்கப்பட்டுள்ளதா என்று தெரிந்த பின்பே மறுதேர்வு நடத்த உத்தரவிட முடியும் எனவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக பாட்னா எய்ம்ஸ் மருத்துவ கல்லூரியில் படிக்கும் சந்தன்குமார், ராகுல் குமார், கரண் ஜெயின், குமார் சானு ஆகிய 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நீட் நுழைவு தேர்வில் இடம்பெற்ற வினாக்களுக்கான விடைகளை நிரப்பி கொடுத்தனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




# மைக்ரோசொப்ட் முடக்கம் விமான சேவைகள் பாதிப்பு

மைக்ரோசாஃப்ட் மென்பொருள் நேற்று முடங்கியதால் உலகம் முழுதும் விமான சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற பல நாடுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

மேலும் 3 ஆயிரம் விமானங்கள் தாமதமாக புறப் பட்டுள்ளன. இந்தியாவில் 6 விமான நிறுவனங்கள் தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொண்டன.

இது தவிர டில்லி விமான நிலையத்தில் சில சேவை கள் நிறுத்தப்பட்டுள்ளன.சேவைகள் நிறுத்தப்பட்ட தால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட் டது.

மேலும், பிரித்தானியாவில் சிறு குழந்தைகளுடன் மக்கள் 3 மணி நேரம் விமான நிலையத்தில் வரிசையில் நிற்கின்ற னர். இது தவிர உலகளவில் பல்வேறு துறைகள் இதனால் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, பிரித்தானியாவின் சில ஊடகங்கள் செயலி ழந்தன. லண்டன் பங்குச் சந்தையும் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் தொலைத்தொடர்பு துறையும் பாதிக்கப்பட்டது.

இதேவேளை, மைக்ரோசாஃப்ட் மென்பொருள் முடங்கி யதைத் தொடர்ந்து இது மூன்றாம் உலகப்போரின் ஆரம்பமாக இருக்கலாம் என இணையத்தில் தகவல்கள் பரவி வருகின் றன.

மைக்ரோசாஃப்ட் மென்பொருள் முடங்கியதைத் தொடர்ந்து



ஊடக நிறுவனங்கள், விமான சேவைகள், வங்கிகள், மருத் துவமனைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் பாதிப் படைந்துள்ளன.

இந்நிலையில், நாம் தாக்குதலுக்குள்ளாகியுள்ளோம் என்னும் ரீதியில் இணையத்தில் செய்திகள் பரவி வரு கின்றன.

மேலும் சிலர், இது மூன்றாம் உலகப்போரின் ஆரம்பமாக இருக்கலாம் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் இந்த மைக்ரோசாஃப்ட் மென்பொருள் முடக்கமானது, புடினுடைய வேலையாக இருக்கலாம் என்றும் கருத்துக்களை பதிவிட ஆரம்பித்துள்ளனர்.

மூன்றாம் உலகப்போர் ஒரு சைபர் போராகத்தான் இருக்கும் என்று தகவல் வெளியாகியிருந்த நிலையில் இந்த அச்சம் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மைக்ரோசாஃப்ட் பாதிப்பை கேலி செய்யும் விதத்தில் எலான் மஸ்க் இடுகை ஒன்றை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.









# சிறைக்குத் தீவைத்த போராட்டக்காரர்கள்: நூற்றுக்கணக்கான கைதிகள் தப்பி ஓட்டம்

## பங்களாதேஷில் தொடரும் பதற்றம்

பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்காகக் கடந்த 1971ஆம் ஆண்டு நடந்த போரில் பங்கேற்ற பங்களாதேஷின் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்பத்தினருக்கு, அந்நாட்டு அரச வேலைவாய்ப்புகளில் 30 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

எனினும் இந்த இட ஒதுக்கீட்டு முறை பாரபட்சமாக உள்ளது எனத் தெரிவித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைநகர் டாக்காவில் உள்ள ஜஹாங்கீர் நகர் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் ஆளும் அவாமி லீக் கட்சியின் மாணவர் பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறையாக மாறியது. பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி மாணவர்களைக் கலைத்தனர். இந்த வன்முறையில் 39 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். பொலிஸார் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

மேலும் போராட்டக்காரர்களால் பொது இடங்கள், சிறைச்சாலை, கட்டடங்கள் என பல பகுதிகளிலும் தீ வைக்கப்பட்டது.

பங்களாதேஷின் மத்திய பகுதியில் உள்ள நர்சிங்டி மாவட்டத்தில் உள்ள சிறைச்சாலைக்குப் போராட்டக்காரர்கள் தீ வைத்தனர்.

இதனைப் பயன்படுத்தி சிறையிலிருந்து 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பி ஓடியுள்ளனர்.









# தங்க நகர் இளம் யுவதி கொலை விசாரணை குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

சேருநுவர, தங்க நகர் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதியின் கொலை தொடர்பான வழக்கு நேற்றைய தினம் மூதூர் நீதிவான் திருமதி. எச். எம்.தஸ்னீம் பௌசான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்கள் 7 பேருக்கும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டுள்ளமையுடன் விசாரணையை திருகோணமலை மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு மாற்றவும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்கில் வழக்கு தொடுனரான மூதூர் பொலிஸ் பொறுப்பதிகாரி சந்தேகநபர்களான 2ஆம், 3ஆம், 4ஆம்,6ஆம் எதிராளிகளை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு விண்ணப்பம் செய்திருந்தார். இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் இந்தப் படுகொலை சம்பவம் தெடர்பில் திருப்திகரமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் விசாரணைகள் பக்கச்சார்பாக இடம்பெறுகின்றன எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கருதுகின்றனர் என விண்ணப்பம் செய்திருந்தமையோடு இந்த வழக்கு விசாரணையை வேறு தரப்பினருக்கு கையளித்து, முறையான விசாரணையை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியை பெற்றுக் கொடுக்குமாறு தமது வாதங்களை முன்வைத்தனர்.

அத்துடன் சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் விண்ணப்பங்களுக்கு எற்ப 2ஆம், 3ஆம். 4ஆம், 6ஆம் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு தமது சமர்ப்பணங்களை முன் வைத்தனர்.

வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதிபதி இந்த சந்தேக நபர்களுக்கு மேலும் 14 நாள்கள் விளக்கமறியலை நீடித்தும் வழக்கு விசாரணையைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றவும் கட்டளை பிறப்பித்தார்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக சட்டத்தரணிகளான ஏ.ஆர்.சுஹாட், ஏ.ஏ.எம்.ஷகிடீன், எம்.எஸ்.எம்.ஷகீர், அமானுல்லா ஷிபா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தங்கநகரைச் சேர்ந்த நடேஷ்குமார் வினோதினி என்ற 25 வயதான இளம் பெண் காணாமல் போயிருந்த நிலையில் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளிவெட்டி கிராமத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள கிணறு ஒன்றில் இருந்து கொலை செய்யப்பட்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிரதான சந்தேகநபரான யுவதியின் காதலன் உட்பட அவரது தந்தை, சிறிய தந்தை, சகோதரி வீட்டில் வேலை செய்யும் நபர், ஜே.சி.பி. வாகனத்துடன் தொடர்புடைய 2 நபர்கள் உட்பட 7 பேர் மூதூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.







# பசுவை இறைச்சிக்கு வெட்டியவர் ஊர்காவற்றுறையில் நேற்று கைது

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரை தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் பசுமாட்டை இறைச்சிக்காக வெட்டிய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டமையுடன் வெட்டுவதற்கு தயாராக இருந்த காளை மாடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையில் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை உட்பட தீவகத்தின் பல இடங்களிலும் அனுமதியற்ற முறையில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுதல் மற்றும் மாடுகள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பசு மாடுகள் இறைச்சிக்காக வெட்டும் பாதகச் செயலும் அரங்கேறி வருகின்றது.

பல வருடங்களாக இடம்பெறும் இச்செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த முடியாமைக்கு காரணம் இவ்வாறு இறைச்சி வெட்டுபவர்கள் தடுக்க வருபவர்களுக்கு லஞ்சம் வழங்குகின்றனர் எனவும் இதனால் அவர்கள் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் பொதுமக்கள் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே நேற்றைய தினம் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி த.சுசிதரன் தலைமையிலான குழுவினர் மேற்படி மாடு வெட்டியவரைக் கைது செய்துள்ளனர். அனுமதியின்றி மாடு வெட்டுவதாக சுகாதார வைத்திய அதிகாரிக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அவர் இத்தகவலை ஊர்காவற்றை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெரிவித்து பொலிஸாரின் உதவியைக் கோரியுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இரு பொலிஸார், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ப. சோழன், பொதுச் சுகாதார பரிசோதகர் யோ.வசிகரன் ஆகியோர் மெலிஞ்சி முனையில் மாடு வெட்டப்பட்ட இடத்திற்குச் சென்றனர்.

அங்குள்ள வீடொன்றில் பசு மாட்டை வெட்டி இறைச்சியாக்கி சமைத்துக் கொண்டிருந்தமை தெரியவந்தது. மற்றொரு காளை மாடு வெட்டுவதற்கு தயாராக கட்டிவைக்கப்பட்டிருந்தது. நிகழ்வொன்றுக்காக தாம் மாட்டை வெட்டியதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். எனினும் மாடு வெட்டுவதற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. இதையடுத்து மாட்டை வெட்டிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மாடும் மீட்கப்பட்டது. வெட்டப்பட்ட பசு மாட்டின் 10 கிலோகிராம் வரையான இறைச்சியும் கைப்பற்றப்பட்டது.

குறித்த நபருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டது. அவர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை, சட்டவிரோதமாக மாடு வெட்டுவது தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் தமக்கு தெரியப்படுத்துமாறு சுகாதார வைத்திய அதிகாரி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



# வவுனியாவில் திடீரென உடைந்து வீழ்ந்த வீடு!

## அதிர்ஷ்ட வசமாக உயிர்பிழைத்த இருவர்!

(கே.வசந்தன்)

வவுனியா, பூந்தோட்டம், சிறிநகர் பகுதியில் வீடு ஒன்று நேற்றுத் திடீரென உடைந்து வீழ்ந்தது. அதிர்ஷ் வசமாக இருவர் உயிர் தப்பியுள்ளனர்.

இந்த வீட்டில் மதியம் கணவனும் மனைவியும் தங்கியிருந்துள்ளனர். இதன்போது வீடு திடீர் என்று உடைந்து வீழ்ந்தது. குறிப்பாக வீட்டின் பின்பக்க சுவர் மற்றும் கூரைப்பகுதி என்பன முற்றாக உடைந்து வீழ்ந்துள்ளது.

அனர்த்தம் இடம்பெற்ற போது கணவனும் மனைவியும் வீட்டிற்கு வெளியில் இருந்தமையால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா சிறிநகர் பகுதியில் 1996 ஆம் ஆண்டு பொதுமக்கள் குடியேற்றப்பட்ட நிலையில் ஐம்பதுக்கும் மேற்ப்பட்ட வீடுகள் வசிப்பதற்கு தகுதியற்ற நிலையில் இருக்கின்றன. தமக்கான வீட்டுத்திட்டம் ஒன்றை வழங்குமாறு இவர்கள் பல்வேறு தரப்புக்களிடமும் பலமுறை கோரிக்கை முன்வைத்துள்ள நிலையிலும் அது இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று கிராமமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.









# தேர்தலின் போது அரச ஊழியர்களை உன்னிப்பாக கண்காணிக்கவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு

ஜனாதிபதித் தேர்தலின் போது அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக கண்காணிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்பு வெளியான பின்னர் நாட்டில் நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் செயற்பட வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

அரச உத்தியோகத்தர்கள் சட்டத்தை பாரபட்சமின்றி அனைவருக்கும் பொதுவாக செயற்படுத்த வேண்டும் என மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தை உரிய முறையில் கடைப்பிடிக்காது சில அதிகாரிகள் செயற்படுவதால் அங்கு மக்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

இதனால், ஜனாதிபதித் தேர்தலின் போது அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் மக்களின் மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்படக்கூடாது என அவர் அறிவுறுத்தியுள்ளார்.



# கப்பல் கவிழ்ந்து காணாமல் போனவர்களை மீட்பதற்கான தேடுதல் பணி தொடர்கின்றது

ஓமான் கடலில் விபத்திற்குள்ளான கப்பலிலிருந்து காணாமற்போன 2 இலங்கையர்கள் உள்ளிட்ட 06 கப்பல் ஊழியர்களைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கப்பல் விபத்துக்குள்ளான சந்தர்ப்பத்தில் 19 பேர் அதில் பயணித்துள்ளனர். இதுவரை 09 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் காணாமற்போயுள்ள இலங்கை பிரஜைகளின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு ஓமான் வெளிவிவகார அமைச்சுடன் நெருங்கிய தொடர்புகளை பேணுவதாக அங்குள்ள இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

மீட்கப்பட்ட இலங்கைப் பிரஜை உடல் நலத்துடன் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனர்த்தத்தில் பணியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஓமானின் கடல்சார் பாதுகாப்பு நிறுவனம் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ளது.

விபத்திற்குள்ளான கப்பலில் இருந்த 9 பணியாளர்கள் இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ் டெக் யுத்தக் கப்பல் மூலம் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் இலங்கையர் என்பதுடன் ஏனைய 8 பேரும் இந்திய பிரஜைகளாவார்.

கப்பலின் கப்டனாக இலங்கையைச் சேர்ந்த வித்யகுமார் கதிர்காமதாசன் செயற்பட்டுள்ளார் என இந்திய கடற்படையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையர்களான குகநேசன் மகேசதாசன் கப்பலின் இரண்டாவது அதிகாரியாக செயற்பட்டுள்ளார்.

கப்பலின் பிரதான பொறியிலாளராக இலங்கையைச் சேர்ந்த தயாநிதி அப்பாசாமி பணியாற்றியுள்ளார்.

காணாமல்போன மற்றைய 06 கப்பல் ஊழியர்களை கண்டுபிடிக்க இந்தியாவும் ஓமானும் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கப்பலில் இருந்த எரிபொருள் கடலில் கசிந்ததா என்பது குறித்து ஓமான் நாட்டின் பாதுகாப்பு அமைச்சு இதுவரை எந்த தகவலையும் வெளியிடவில்லை.

கொமொரோஸ் கொடியின் கீழ் பயணித்த 117 மீற்றர் நீளமான பிரஸ்டீஜ் பெல்கன் என்ற எரிபொருள் கப்பல் கடந்த திங்கள் கிழமை பிற்பகல் ஓமானின் கடலில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.



# காற்றுடனான வானிலை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

நாட்டை ஊடறுத்து வீசும் பலத்த காற்றுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக் கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இடைக்கிடையே காற்றின் வேகம் மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

நாட்டில் ஏனைய பிரதேசங்களில் இடைக்கிடையே காற்று மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கடவுச்சீட்டுகளை வழங்கப் புதிய வழிமுறையை கையாளும் குடிவரவு - குடியகல்வு திணைக்களம்

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக நேற்று பெரும்பாலானோர் வருகை தந்ததால் பத்தரமுல்லை குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்றைய தினத்தை முன்கூட்டியே பதிவு செய்யாமல் குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் தலைமையகத்திற்கு பலர் வருகை தந்ததால் இந்நிலைமை ஏற்பட்டது.

விண்ணப்பதாரர்களின் நலனுக்காகவும் செயல்முறையை சீரமைக்கவும் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான புதிய வழிமுறையை குடிவரவு – குடியகல்வு திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கிணங்க நேற்று முதல் கடவுச்சீட்டு வழங்கும் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய கடவுச்சீட்டுகளுக்கு விண்ணப்பிக்க விண்ணப்பதாரர் www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும்.

ஒன்லைனில் பதிவு செய்ததன் பின்னர், முன்னுரிமை முறையின் படி கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் என குடிவரவு – குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட போதிலும் இன்று காலை பத்தரமுல்ல பகுதியிலுள்ள குடிவரவு குடியகல்வு – திணைக்கள அலுவலகத்திற்கு கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக அதிகளவானோர் வருகை தந்ததால் அங்கு நெரிசல் ஏற்பட்டுள்ளது.

திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்பவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தயடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குடிவரவு – குடியகல்வு திணைக்களத்திற்கு முன்பாக நீண்ட வரிசைகளும் நெரிசலும் காணப்பட்டமையுடன் நிலைமையை கருத்திற்கொண்டு பொலிஸாரை வரவழைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# விசேட தேவையுடையோர் வாக்களிக்க விசேட வசதி

ஜனாதிபதித் தேர்தலில் முதன்முறையாக விழிப்புலனற்றோர் மற்றும் செவிப்புலன் குறைபாடுடையவர்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

பார்வையற்றோர் பிரெய்ல் முறையில் வாக்குச் சீட்டின் அடையாளங்களை இனம்காணும்விதத்தில்விசேட முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத் நாயக்க தெரிவித்தார்.

செவித்திறன் குறைபாடுடையோருக்கு சைகை மொழியில் வாக்குச் சீட்டு குறித்து தெளிவுப்படுத்துவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் முன்னோடித் திட்டங்கள் கடந்த சில நாள்களாகப் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டமையுடன் அதன் வெற்றிகரமான பெறுபேறுகளின் அடிப்படையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கும் அதே வசதிகள் வழங்கப்படவுள்ளன.

வலது குறைந்தோர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கும் விசேட வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பதிவாகியுள்ள வாக்களிக்கும் விழிப்புலனற்றோர் மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர், கிராம உத்தியோகத்தர் மூலம் கண்டறியப்பட்டு அவர்களூடாக தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் ந்த் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# நிமல் சிறிபால டி சில்வாவிற்கு திரும்பவும் அழைப்பாணை!

எதிர்வரும் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி விடயங்களை முன்வைக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்ப நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.



கொழும்பு 10 - டி.பி ஜயா மாவத்தையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தை கடந்த 5 ஆம் திகதி பூட்டி வைத்தமை தொடர்பிலேயே மாளிகாகந்த நீதவான் லோச்சனீ அபேவிக்ரம இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் பிரதம செயலாளர் திலங்க சுமதிபாலவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிமன்றம் இதற்கு முன்பு விதித்த அழைப்பாணையை வழங்குவதற்காக பல தடவைகள் நிமல் சிறிபால டி சில்வாவின் வசிப்பிட முகவரிக்கு சென்ற போதிலும் அவர் அங்கு இருக்கவில்லை என திலங்க சுமதிபாலவின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி உபாலி அமரசிங்க நேற்று நீதிமன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து நிமல் சிறிபால டி சில்வாவுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதனிடையே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி மற்றும் அதன் அலுவலக இடத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக திலங்க சுமதிபாலவினால் நேற்று மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த 2 வழக்குகளும் மீண்டும் எதிர்வரும் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.




# 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் வர்த்தமானியால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்தத் தடையும் இல்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

22 ஆவது திருத்தச் சட்டமூலம், வர்த்தமானியில் வெளியாக்கப்பட்டமையால் ஜனாதிபதி தேர்தலுக்கு அது எந்தத் தடையையும் ஏற்படுத்தாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க பதுளையில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவிப்பு, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் எந்த விதமான தாக்கத்தையும் செலுத்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புக்காக எந்தவிதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.







# ஹிங்குரக்கொட உள்ளூர் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்ற நடவடிக்கை

## நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

ஹிங்குரக்கொட உள்ளூர் விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலை யமாக மாற்றுவதற்கான நிர்மாணப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விமானப் போக்குவரத்து மற்றும் கப்பற்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில், நாட் டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்த விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காகக் கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் 2 பில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டது. இந்த விமான நிலையம் இரண்டாம் உலகப் போர்க் காலப் பகுதியில் இங்கிலாந்தின் ரோயல் விமானப்படையின் பயன்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.







# மனித மூலதன அபிவிருத்திக்கான பிராந்திய மையமாகும் இலங்கை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்

"மனித வள அபிவிருத்திக்கான பிராந்திய மையமாக இலங்கையை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற '2024 இலங்கை மனித மூலதன உச்சி மாநாட்டில்' உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது இலங்கை எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காண அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரே தளத்தை அமைக்கும் நோக்குடன் 'இலங்கை மனித மூலதன உச்சி மாநாடு" ஆரம்பிக்கப்பட்டது.

"எதிர்காலத்திற்கு ஏற்ற தொழிலாளர் படையைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பொருளாதார வாய்ப்புகளுக்கான கதவுகளை திறத்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற இந்த ஆண்டு மாநாட்டில் மனித மூலதனத்தை வளர்ப்பது, பயன்படுத்துவது மற்றும் விரிவுபடுத்துவது ஆகியன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த முயற்சியானது வெறும் பொருளாதார வளர்ச்சிக்கு அப்பால் சென்று இலங்கையை குறைந்த நடுத்தர வருமான பொருளாதாரத்தில் இருந்து வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. திறமையை வளர்த்தல், புதுமைகளை மேம்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு குடிமகனுக்கும் அதிகாரம் அளிப்பதில் எதிர்பார்ப்பு மாற்றம் தங்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் அரச துறை திறன் மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, நிதிச் சேவைகள் மற்றும் முன்முயற்சிகள் ஆகிய துறைகளில் மூலோபாய ஆற்றலுக்கு இந்த மாநாடு முன்னுரிமை அளிக்கும்.

முதலீட்டுச் சபையின் தலைவரும் மனித மூலதன உச்சி மாநாட்டின் தலைவருமான தினேஷ் வீரக்கொடி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசன் ஆகியோருக்கு நினைவுப் பரிசுகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –

"2022 ஆம் ஆண்டில், சுமார் நான்கு இலட்சம் இலங்கையர்கள், நாட்டை விட்டு வெளியேறினர் எனக் கூறப்படுகிறது. 2023 இல் நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கையும் இதே அளவானதாகும். இந்த எண்ணிக்கை தொடர்ந்து குறையும் அல்லது அதே அளவில் இருக்கும்.

ஆனால் நாம் தேவையான அடிப்படை பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டால், 2026-2027 ஆம் ஆண்டிற்குள் இந்த நிலையை, நிறுத்த முடியும். நம்நாட்டின்வங்குரோத்துநிலை அவர்களின் வாழ்க்கையை மிகவும் கடினமாக்கியது. அவர்களின் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. அவர்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தப் பணம் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் நாட்டை விட்டு வெளியேற முடிவு செய்தனர்.

ஒரு டொலரின் பெறுமதி 185 ரூபாயாக இருந்தபோது தான் சம்பளம் தயாரிக்கப்பட்டது. ஆனால் டொலரின் பெறுமதி 300 ரூபாயாக இருக்கும்போது

தொடர்ச்சி▼














# மனித மூலதன அபிவிருத்திக்கான பிராந்திய மையமாகும் இலங்கை

தொடர்ச்சி▲

விலை நிர்ணயம் செய்கிறோம். எனவே, ஒரு நடுத்தர வர்க்க நிர்வாகியின் இருப்பு எப்படி இருக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்யலாம்.

நாங்கள் இதுவரை செய்ததெல்லாம், இறையாண்மை கொண்ட அரசுகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய இரு தரப்பிலுமுள்ள கடன் வழங்குநர்களினால் எமக்கு நிவாரணங்கள் வழங்கிய பிறகு எம்மால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்துவது மாத்திரம்தான். ஆனால் கடனை எப்படி திருப்பிச் செலுத்துவது, அதற்கான பணத்தை எங்கிருந்து பெறுவது? அந்நியச் செலாவணியை எவ்வாறு பெறுவது? என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நான் பொருளாதார பரிமாற்றச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, நாடாளுமன்றத்தில் ஒரு தரப்பினர் நீதிமன்றத்திற்குச் சென்று, இறக்குமதி சார் பொருளாதாரமொன்று அவசியம் என்பதால் அதை நிராகரிக்க வேண்டும் என்று கோரினார்கள். இறக்குமதி சார் பொருளாதாரம் என்று ஒன்று இருக்கிறது என்ற எண்ணத்தை முதலில் அகற்ற வேண்டும். நாம் முதலில் மிகவும் போட்டி நிறைந்த நவீன ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நம்மை தயார் படுத்த வேண்டும்.

இப்போது அதற்கான வாய்ப்பு வந்துள்ளது. பொருளாதாரத்தில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை நம் நாட்டில் பலர் உணர்ந்துள்ளனர். எனவே, அவர்களுக்குத் தேவையான துறைகள் தொடர்பான அறிவை அவர்களுக்கு வழங்க முடியும்.

நவீன முறையில் விவசாயம் செய்ய மூன்று முதல் நான்கு லட்சம் ஏக்கர் நிலம் உள்ளது. விவசாயத்தை நவீனப் படுத்தக்கூடிய கிராமப்புற மக்களுக்குச் சொந்தமான நிலமும் எங்களிடம் உள்ளது.

சுற்றுலாத் துறையைப் போலவே, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களுக்கும் தன்னியக்கத்தைப் பயன்படுத்த மக்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்பு பற்றி இங்கு பேச விரும்புகிறேன்.

இந்தியாவுடன் ஒருங்கிணைந்த மின் இணைப்பு கட்டமைப்பு குறித்து ஒரு முடிவை எட்டியுள்ளோம். ஆனால் அனைத்து அம்சங்களையும் விட நில இணைப்பு முக்கியமானது.

ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுடன் இணைந்து மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களுடன் தமிழகமும் போட்டியிடுகிறது. இந்தப் போட்டியில் இலங்கை, திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களை பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறு விரிவுபடுத்தப்பட வேண்டிய பல துறைகளை அடையாளம் கண்டுள்ளோம். மேலும் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் அதை விட உள்ளூர் முதலீடுகளுக்கும் வாய்ப்பானதாக இருக்க வேண்டும்.

பாரிய அளவிலும், சிறிய அளவிலும் தனியார் துறையை விரிவுபடுத்த வேண்டும். அது தவிர வேறு வழியில்லை. இந்த கட்டமைப்பிற்குள், நமது மனித மூலதனத்தைக் கட்டியெழுப்புவதை நாம் பார்க்க வேண்டும். நிதி மூலதனம் இல்லாமல் மனித மூலதனத்தை உருவாக்க முடியாது. எனவே இந்த அணுகுமுறையை எடுக்க வேண்டும்.

நாம் முதலில் தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறையில் கவனம் செலுத்த வேண்டும்."– என்றார்.



















# சலுகைகள் நுகர்வோருக்கு வழங்கப்படாவிட்டால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்க வேண்டி ஏற்படும்

## வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நலின் பெர்னாண்டோ எச்சரிக்கை




“அரசாங்கம் வழங்கும் சலுகைகளை நுகர்வோருக்கு வழங்குவதற்கு வர்த்தகர்கள் செயற்படாவிட்டால் குறிப்பிட்ட சில பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நேரிடும்.”

– இவ்வாறு வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த சில ஆண்டுகளாக நிலவிவந்த நெருக்கடி காலத்தை தற்போது முடிவுக்கு கொண்டு வர முடிந்துள்ளது. அதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கினார். இந்த வெற்றியை அடைவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நாம் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம். அதன் வெற்றிகரமான பலனை மக்கள் தற்போது அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன், கடந்த இரண்டு வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாகவே மக்களுக்கு சலுகைகளையும் நிவாரணங்களையும் வழங்க முடிந்துள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும். இதன் மூலம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடிந்தது. அத்துடன் மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், வங்கி வட்டியை குறைக்கும் நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதற்கு தேவையான கொள்கை ரீதியிலான முடிவுகளை மத்திய வங்கி எட்டியுள்ளது. அதன்படி, அடுத்த சில மாதங்களில் மக்களுக்கு மேலும் பல்வேறு நிவாரணங்கள் கிடைக்கும் என்று எமக்கு நம்பிக்கை உள்ளது.

மேலும், நுகர்வோர் சட்டத்தில் திருத்தம்செய்ய சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு வாரங்களில் இது தொடர்பான பரிந்துரைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும், நுகர்வோர் மற்றும் வர்த்தகர் இடையே உள்ள புரிந்துணர்வை அதிகரிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, தற்போது வாரத்திற்கு ஒருமுறை 15 அத்தியாவசியப் பொருள்களின் விலையை அறிவித்து வருகின்றோம். ஆனால் அரசாங்கம் வழங்கும் சலுகைகள் நுகர்வோர்களுக்கு கிடைக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில நாள்களில் வர்த்தக சங்கங்களுடன் இது குறித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம். நாம் வழங்கும் சலுகைகள் நுகர்வோருக்கு வழங்கப்படாவிட்டால் குறிப்பிட்ட சில பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்ய நேரிடும் என்பதையும் கூற வேண்டும்.” – என்றார்.

# விபச்சாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வவுனியாவில் நான்கு பெண்கள் கைது!

(கே.வசந்தன்)



வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் விடுதி ஒன்றில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனையின் போது விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் இரவு விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது தேக்கவத்தைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் சோதனை செய்த போது விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் காலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர். மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# வளர்ச்சியடையும் பொருளாதாரப் பலன்கள் சாதாரண மக்களை சென்றடைய வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“இலங்கை இதுவரை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தின் பலன்கள் பொது மக்களுக்கும் பகிரப்பட வேண்டும். அந்தப் பொறுப்பில் இருந்து தாம் ஒருபோதும் விலகப் போவதில்லை என்பதோடு, அதற்காக அரசாங்கம் சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்றது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் தொழில்சார் முச்சக்கரவண்டி மற்றும் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

ஓட்டோ சாரதிகளின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட யோசனைகள் மற்றும் முன்மொழிவுகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் இதன்போது போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இதன்போது ஜனாதிபதி மேலும் கருத்து தெரிவிக்கையில் –

“நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேவை. முதலீடுகள் ஊக்குவிப்பதன் மூலம் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதுடன் ஏற்றுமதியையும் அதிகரிக்க முடியும். ஆனால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் வேளையில் கடந்த கால நெருக்கடியில் பாதிக்கப்பட்ட மக்களை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த பொருளாதார வளர்ச்சியின் பலன்களை இந்த நாட்டின் சாதாரண மக்களுக்கு வழங்குவதே எனது பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. அந்த மக்களுக்காக, ஆறுதல் திட்டத்தை செயல்படுத்தினோம். அங்கு, நலத்திட்ட உதவிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை, மூன்று மடங்காக உயர்த்தப்பட்டு, பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

கடந்த புத்தாண்டு காலத்தில் மக்களுக்கு இரண்டு மாதங்களுக்கு 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. அத்துடன் இலவச காணி உரிமையை வழங்க உறுமய வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு, அவர்கள் வசிக்கும் வீடுகளின் உரிமையை வழங்க ஆரம்பித்துள்ளோம். மேலும், பெருந்தோட்ட பிரதேசங்களை கிராமங்களாக மாற்றும் திட்டங்களும் உள்ளன. இந்தப் பணிகள் அனைத்தும் இந்நாட்டின் சாதாரண மக்களின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்டவையாகும்.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெரிய அளவிலான முதலீட்டாளர்களை நாட்டில் புதிய முதலீடுகளுக்கு அழைக்கிறோம். கடந்த பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறு, நடுத்தர வர்த்தகர்கள் உள்ளிட்ட சாதாரண மக்களை முன்னேற்றும் திட்டத்தையும் செயல்படுத்தியுள்ளோம்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் போது முச்சக்கரவண்டி சாரதிகளையும் நாம் மறந்துவிடவில்லை. இந்த பொருளாதார முறையை கைவிட்டால் என்ன நடக்கும்? கடன் நிபந்தனைகள் மீறப்பட்டால் என்ன நடக்கும்? என்பதை பற்றியும் சிந்திக்க வேண்டும். இன்று ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளோம். நாம் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டுமானால், சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்து செயல்பட வேண்டும். இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.”– என்றார்.











# இன்றைய ராசி பலன்கள் - 20.07.2024




இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரலாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.




இன்ற உங்கள் ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி நிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில்




இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும். அதிக நீரைப் பருகவும்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.07.2024




உங்கள் மனதை இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் ஓய்வாக வைத்துக் கொள்ள முடியும்.நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் மனதில் காணப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். அதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களின் ஈகோ உணர்வை வெளிபடுத்தாதீர்கள். நட்புடன் அணுகுங்கள்.

திடீர் செலவுகள் எதிர்கொள்ள நேரலாம். சேமிப்புக்கென்று சிறிது பணத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்வது நல்லது.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள். நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள். தூக்கமின்மை மற்றும் பதற்றம் காரணமாக தலைவலி காணப்படும்.




